# Sample Question paper ( Tamil )

மாதிரி வினாத்தாள் - தமிழ்
பத்தாம் வகுப்பு (Class - X)
ஏப்ரல் 2010 - செப்டம்பர் 2010
**I - TERM (April 2010 - SEP 2010)**

Max. Marks : 80 — Time Allowed : 3 hours
*மொ.மதிப்பெண் கள்; 80* — *கால அளவு : 3 மணி*

The question paper is diveded in to four sections:
**இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | |
|---|---|---|
| **SECTION : A** | Reading comprehension | - 15 Marks |
| பிரிவு : அ | படித்தல் (உரைநடைப் பகுதி) | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : B** | **Writing** | - 15 Marks |
| பிரிவு : ஆ | எழுதுதல் | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : C** | Grammar | - 15 Marks |
| பிரிவு : இ | இலக்கணம் | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : D** | **Literature / Text Books** | - 35 Marks |
| பிரிவு : ஈ | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | -35 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.
★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

1. **கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

1947 - இல் பாரத நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே எல்லாரும் சமம் என்று பாடியுள்ளார் சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் கண்ட கனவு இன்று வரை நனவாகவில்லை. அவர் கனவு நனவாகக் குறைந்த

பட்சம் அவர் தம் தேசிய பாடல்களைப் பாரத மக்கள் படிக்க வேண்டும். அவர் கவிதைகள் தமிழ் மொழியில் இருந்தாலும் பாடப்பட்ட பொருள் என்னமோ இந்தியத் தேசிய ஒருமைப்பாடு ஆகும். ஆதலால் எல்லா இந்திய மொழிகளிலும் இவர் தம் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட வேண்டும். விடுதலையை மட்டும் விரும்பி அவர் பாடவில்லை. விடுதலைக்குப் பின்னும் மக்கள் சரிநிகர் சமானமாக ஒத்த மதிப்பு பெற வேண்டும் என்பதுதான் அவர் குறிக்கோள்.

இமயம் முதல் குமரி வரை பாரதம் நிலத் தோற்றத்தில் ஒன்றாக இருந்தாலும் மக்கள் உள்ளத்தில் ஒற்றுமை வேண்டுமன்றோ? விடுதலை அடைவதற்கு முன்னரே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று சுதந்திரப் பள்ளு பாடிய தேசியப் பாவலர் பாரதியார். சுதந்திரம் பெற்ற பின் நாட்டில் என்னென்ன எண்ணங்கள் எழ வேண்டும்; செயல் வடிவம் காண வேண்டும் என்பதை வலியுறுத்திக் கவிதைகள் இயற்றியுள்ளார் பாரதியார்.

சுதந்திரம் பெற்ற நாட்டில் எல்லோரும் சமம் ஆவர். பொய்யான ஏமாற்றத்திற்கு இடம் கொடாமை, நல்லவரையும் பெரியவரையும் மதித்தல், நயவஞ்சகம் இல்லாமை, உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்பு, உழைக்காதவரை மதியாமை, நாமிருக்கும் நாடு நமது என்ற பற்று, இந்நாடு நமக்கே உரிமை என்ற அறிவு ஆகிய பண்புகள் இருந்திடல் வேண்டும்.

இந்திய மக்கள் எல்லாரும் மத, இன, மொழி, தொழில், பேதம் ஏதுமின்றி ஓரணியில் திரண்டு வெள்ளையரை வெளியேற்ற வேண்டும் என்பது பாரதியின் நோக்கமாகப் புலப்படுகிறது.

**வினாக்கள்**

(i). கனவு என்ற சொல் எப்பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது? *(1)*

அ. சமம்
ஆ. விருப்பம்
இ. விடுதலை
ஈ. பாட்டு

(ii). பாரதியார் பாடல்கள் ஏன் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்? *(1)*

அ. பாரதியாரின் புகழைப் பரப்ப
ஆ. பாரத மக்கள் அனைவரும் படிக்க
இ. எல்லாரும் பாரதியைப் பற்றி அறிய
ஈ. இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்க

(iii) குறிக்கோள் என்பதன் பொருள் யாது? *(1)*

அ. மதிப்பு

ஆ. கொள்கை

இ. விடுதலை

ஈ. இலக்கு.

(iv) சுதந்திரம் பெற்ற நாட்டில் எல்லாரும் *(1)*

அ. உண்மை பேசுவர்

ஆ. சமமாக மதிக்கப்படுவர்

இ. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வர்

ஈ. உழைக்காதவர்கள் ஒடுக்கப்படுவார்கள்

(v) இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பாரதி பாடியதன் நோக்கம் **(1)**

அ. இந்திய நாடு விடுதலை பெற வேண்டும்.

ஆ. இந்திய மக்கள் மத, இன, தொழில் வேறுபாடு பாராட்டக் கூடாது.

இ.இந்திய மக்கள் ஓரணியில் திரண்டு வெள்ளையரை விரட்ட வேண்டும்

ஈ. இந்தியா பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண வேண்டும்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். *(5)***

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல் வாணிகம் பெயரளவில் நடந்து வந்தது. 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்' என்னும் கம்பெனியின் கப்பல்களே இவ்விரு நாடுகளுக்கிடையில் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. இக் கம்பெனி ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்தது. அக் காலத்தில் இந்தியர்களால் நடத்தப்படும் கப்பல் கம்பெனி ஒன்றுமில்லை. எனவே கப்பல் வாணிகத்தில் வெள்ளையர்களே முழு உரிமை கொண்டிருந்தார்கள் அத்தோடு அவர்கள் வைத்ததே சட்டமாகவும் இருந்தது. இந்தியர் வாணிகம் தலையெடுக்காதபடி பல நடைமுறைகளையும் கையாண்டனர். நம் நாட்டு ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கட்டணங்களை மிகுதிப் படுத்தினர். பிற இடங்களில் குறிப்பிட்ட பொருள்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும் சமயத்தில் கப்பலில் அப் பொருள்களை ஏற்றிச் செல்லவும் மறுத்தனர். இந் நிலையில் சிதம்பரனார் 1906 - ஆம் ஆண்டு சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்கினார். உறுப்பினர்களாக 13 - பேரும் சட்ட ஆலோசகராக நால்வரும் நியமிக்கப்

பட்டனர். பலர் பங்குதாரர்களாய் சேர்ந்தனர். இயன்ற அளவு பொருளுதவி செய்ய முன் வந்தனர். எனினும் இப் பொருளகள் கப்பல் வாங்கப் போதுமானதாக இல்லை. ஆதலால் பம்பாயில் இருந்த ஷாலையன் என்ற கம்பெனியிடம் கப்பல் ஒன்றைக் குத்தகைக்கு வாங்கித் தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமாக வாணிகத்தைத் தொடங்கினார்.

சுதேசி கப்பல் கம்பெனி வணிக நோக்கத்தையும் பொருள் சேர்க்கும் எண்ணத்தையும் மாத்திரம் கருதி இயங்கவில்லை. `` சொந்த நாட்டுத் தொழில்கள் வளர வேண்டும். சுதேசி இயக்கம் மக்கள் மனதில் வேரூன்ற வேண்டும்'' என்ற உயர்ந்த குறிக்கோளோடு இயங்கி வருகிறது.

**வினாக்கள்**

(i) *ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்த கப்பல் கம்பெனி எது?* *(1)*

அ. சுதேசு கப்பல் கம்பெனி
ஆ. ஷாலையன் கம்பெனி
இ. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்
ஈ. தூத்துக்குடி கப்பல் கம்பெனி

(ii) *இந்தியர் வணிகம் தலையெடுக்காமலிருக்க ஆங்கிலேயர் செய்தது என்ன?* *(1)*

அ. ஆங்கிலேயர்களே வாணிகத்தில் முழு உரிமை பெற்றிருந்தனர்.
ஆ. இந்திய வணிகர்களையும் தங்கள் கப்பல் கம்பெனியில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டனர்.
இ. இந்தியர்களால் நடத்தப்பட்ட கப்பல் கம்பெனி ஒன்றுமில்லை.
ஈ. கட்டணங்களை மிகுதிப்படுத்தியதோடு உரிய நேரத்தில் ஏற்றுமதி செய்யவில்லை.

(iii) *சுதேசிக் கப்பல் கம்பெனியில் மேலாண்மைக் குழுவில் இடம் பெற்றவர்களின் எண்ணிக்கை* *(1)*

அ.13 பேர்
ஆ. 17 பேர்
இ. 4 பேர்
ஈ. 17 க்கும் மேற்பட்டோர்

(iv) *சுதேசிக் கப்பல் கம்பெனியின் குறிக்கோள்* *(1)*

அ. ஆங்கிலக் கம்பெனியின் கொட்டத்தை அடக்குதல்
ஆ. விடுதலை உணர்வைத் தோற்றுவித்தல்

இ. நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தல்
ஈ. இலங்கையோடு தொடர்பு கொள்ளுதல்

(v) கப்பல் எந்தக் கம்பெனியிடமிருந்து குத்தகைக்கு வாங்கப் பட்டது?(1)

அ. ஷாலையன்
ஆ.சுதேசிக் கப்பல் கம்பெனி
இ. தூத்துக்குடிக் கம்பெனி
ஈ.கிழக்கிந்தியக் கம்பெனி

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

அண்ணல் காந்தியடிகள் ஜாலியன் வாலாபாக்கில் பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறு கண்டு கலங்கினார். அக் கொடிய உயிர்க் கொலை நிகழ்ச்சி அவரைத் தீவிர சிந்தனையில் ஆழ்த்தியது. கத்தியில்லாமல், இரத்தமில்லாமல் அன்பு நெறியின் மூலமே சுதந்திரத்தை அடைய வேண்டும் என்று உறுதி பூண்டார். உண்மை, இன்னா செய்யாமை முதலான அறங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார். சத்தியாக்கிரகம் என்னும் கொள்கையைத் தெளிவு படுத்தினார். அதன் விளைவாக ஒத்துழையாமை இயக்கம் பிறந்தது. இப் புதிய போராட்ட முறையால் நாட்டில் அமைதியான பெரும் புரட்சி உருவாயிற்று. நாட்டு மக்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தனர். வழக்கறிஞர்கள் நீதி மன்றத்தை விட்டு வெளியேறினர். மாணவர்கள் கல்வி நிலையங்களைத் துறந்தனர். ஆங்கில அரசு செயலிழந்து செய்வதறியாது திகைத்தது. இதை எப்படி சமாளிப்பது என்று யோசித்தது.

**வினாக்கள்**

(i) காந்தியடிகளின் உள்ளம் கலங்கியது (1)

அ. மக்களிடமுள்ள வறுமை
ஆ. வேலையில்லாத் திண்டாட்டம்
இ. ஜாலியன்வாலாபாக் படுகொலை
ஈ. உயிர்ச் சேதம்

(ii) அன்பு நெறியின் மூலம் காந்தி வேண்டுவது (1)

அ. உண்மை
ஆ. விடுதலை
இ. சத்தியாக் கிரகம்
ஈ. ஒத்துழையாமை

(iii) காந்தி தெளிவுபடுத்திய கொள்கை (1)

அ. அறப்போராட்டம்
ஆ. சத்தியாக்கிரகம்
இ. சுதந்திரம்
ஈ. தீவிர சிந்தனை

(iv) சத்தியாக்கிரகத்தால் பிறந்தது (1)

அ. சுதந்திரம்
ஆ. வழக்குகளில் வெற்றி
இ. மக்களின் சம வாழ்வு
ஈ. ஒத்துழையாமை இயக்கம்

(v) காந்தியின் போராட்டத்தால் ஆங்கில அரசு (1)

அ. வெளியேறியது
ஆ. வளர்ந்து வந்தது
இ. செயலிழந்து போனது
ஈ. செய்வது அறியாது செயலிழந்து போனது

## பகுதி - ஆ

1. உனக்குத் தேவைப்படும் சில புத்தகங்களை அனுப்புமாறு சென்னையிலுள்ள ஒரு புத்தக நிறுவனத்தாருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. (6)

(அல்லது)

உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்றவிழா குறித்து உனது தம்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

★ உமது முகவரி: இரா. தமிழ்ச் செல்வன்/ தமிழச் செல்வி, 28 காந்தி நகர், மதுரை எனக் கொள்க.

2. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.** (6)

அ. கல்வி - யாவருக்கும் கல்வி - கிராமங்களிலும் கற்றல் ஆர்வம் - வாழ்வியற் கல்வி - வாழ்வில் புது மலர்ச்சி - ஒளி மயமான எதிர்காலப் பாதையில் இளைஞர் நடைபோட வழி செய்தல்.

ஆ. சுற்றுப் புறச் சூழல் மாசு - மாசு நீக்கும் வழிகள் - இயற்கையைக் காத்தல் - நலமானநோயற்ற வாழ்வு

இ. நீர் வளம் பேணல் - மழை நீர் சேமிப்பு - சேமிக்கும் முறை - பயன்கள்

3. **உனது ஊரில் நடைபெற்ற கண் தான முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.** ***(3)***

***(அல்லது)***

**உனது பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சி குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.**

## பகுதி - இ

***1. சான்று தருக: (எவையேனும் மூன்று மட்டும்)*** ***(3)***

(i) திணை வழு

அ. இராமு வந்தான்

ஆ. இராஜூ வந்தது

இ. அந்தணர் வந்தான்

ஈ. மாடுகள் வந்தது

(ii) ஒன்றொழிப் பொதுச்சொல்

அ. ஆயிரம் மக்கள் போர் செய்தனர்

ஆ. ஆயிரம் ஆண்கள் போர் செய்தனர்

இ. ஆயிரம் வீராங்கனைகள் போர் செய்தனர்

ஈ. ஆயிரம் அரசர்கள் போர் செய்தனர்

(iii) ஒரு பொருட் பன்மொழி

அ. நீர் சல சல என ஓடிற்று

ஆ. பாம்பு! பாம்பு!

இ. ஓங்கி உயர்ந்த மரம்

ஈ. மரம் மட மட என முறிந்தது

(iv) கொடை வினா

அ. தொலைவில் தோன்றுவது எருதோ? பசுவோ?

ஆ. இப் புத்தகம் என்ன விலை?

இ. உனது பெயர் என்ன?

ஈ. புலவரிடம் பொருள் இல்லையோ?

(v) ஏவல் விடை

கடைக்குச் சென்று வருவாயா? என்னும் வினாவிற்கு

அ. செல்வேன் என்பது

ஆ. செல்லேன் என்பது

இ. நான் ஏன் செல்ல வேண்டும்? என்பது

ஈ. நீயே செல் என்பது

**2. நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

(i) ``தஞ்சைக்கு செல்லும் வழி யாது? என்னும் வினாவிற்கு" இது என்று சுட்டிக் காட்டுவது -------- விடை ஆகும்.

அ. நேர் விடை

ஆ. ஏவல் விடை

இ. சுட்டு விடை

ஈ. மறை விடை

(ii) கோயிலுக்கு உடன் வருவாயா? என்னும் வினாவிற்கு வேலை இருக்கிறது என்று கூறுவது

அ. சுட்டு விடை

ஆ. உறுவது கூறல் விடை

இ. உற்றது உரைத்தல் விடை

ஈ. வினா எதிர் வினாதல் விடை

(iii) இலக்கண முறைப்படி பேசுவதும் எழுதுவதும் ------ ஆகும்.

அ. வழு

ஆ. வழா நிலை

இ. வழுவமைதி

ஈ. அடுக்குத் தொடர்

(iv) இலக்கண முறையின்றி அமைந்ததை ஏதேனும் ஒரு காரணம் கருதி இலக்கணமுடையதைப் போல் ஏற்றுக் கொள்வது -------- ஆகும்.

அ. வழு

ஆ. வழுவமைதி

இ. வழா நிலை

ஈ. ஒன்றொழி பொதுச் சொல்

(v) முன்னிலைப் பெயர் படர்க்கை வினை கொண்டு முடிவது

அ. திணை வழு

ஆ. இட வழு

இ. பால் வழு

ஈ. மரபு வழு

3. **கூறியவாறு செய்க.** *(எவையேனும் மூன்றை மட்டும்)* **(3)**

(i) *நீ வந்தாய் (வழுவாக்குக)*

அ. நீ வருவாய்

ஆ. நீ வரலாம்

இ. நீ வருகின்றாய்

ஈ. நீ வருவான்

(ii) குயில் கத்தும் *(வழு நீக்குக)*

அ. குயில் கீச்சிடும்

ஆ. குயில் அகவும்

இ. குயில் கூவும்

ஈ. குயில் குழறும்

(iii) செல்வன் வந்தாள் *(வழுவமைதியாக்குக)*

அ. செல்வன் வந்தான்

ஆ. செல்வன் வருவான்

இ. செல்வன் வந்தார்

ஈ. செல்வன் வருகின்றான்

(iv) குழந்தை சிரித்தது *(பொருத்தமான இரட்டைக் கிளவி சேர்க்க)*

அ. குழந்தை மட மட என சிரித்தது.

ஆ. குழந்தை குடு குடு என சிரித்தது.

இ. குழந்தை கல கல என சிரித்த்தது.

உ. குழந்தை சள சள என சிரித்தது.

(v) ஞாயிறு *(ஒரு பொருட் பன்மொழியாக்குக)*

அ. கதிரவன்

ஆ. ஞாயிற்றொளி

இ. மீமிசை ஞாயிறு

ஈ. ஞாயிற்றுக் கிழமை

4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்று மட்டும்) **(3)**

(i) முருகன் வந்தார்

அ. திணை வழுவமைதி

ஆ. பால் வழுவமைதி

இ. இட வழு

ஈ. மரபு வழு

(ii) நேற்று வருவான்

அ. திணை வழு

ஆ. பால் வழு

இ. காலவழு

ஈ. இட வழு

(iii) பள்ளிக்குச் செல்வாயா? என்னும் கேள்விக்குச் செல்வேன் என்பது

அ. மறை விடை

ஆ. நேர் விடை

இ. ஏவல் விடை

ஈ. சுட்டு விடை

(iv) பத்தாம் வகுப்பு தமிழ்ப் புத்தகம் உள்ளதா?

அ. அறிவினா

ஆ. ஐய வினா

இ. அறியா வினா

ஈ. கொளல் வினா

(v) இந்தக் கண்ணன் ஒரு நாளும் பொய் சொல்ல மாட்டான்

அ. திணை வழு

ஆ. திணை வழுவமைதி

இ. இட வழு

ஈ. இட வழுவமைதி

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

(i) அ. ஒரு பொதுச் சொல் குறிப்பால் ஒரு பாலை விலக்கி மற்றொரு பாலை மட்டும் சுட்டுவது ஒரு பொருட் பன்மொழி ஆகும்.

ஆ. ஒரு பொதுச் சொல் குறிப்பால் ஒரு பாலை விலக்கி மற்றொரு பாலை மட்டும் சுட்டுவது ஒன்றொழி பொதுச் சொல் ஆகும்.

இ. ஒரு பொதுச் சொல் குறிப்பால் ஒரு பாலை விலக்கி மற்றொரு பாலை மட்டும் சுட்டுவது வழுவமைதி ஆகும்.

ஈ. ஒரு பொதுச் சொல் குறிப்பால் ஒரு பாலை விலக்கி, மற்றொரு பாலை மட்டும் சுட்டுவது வழு ஆகும்.

(ii) அ. விரைவு, வெகுளி, அச்சம் முதலிய பெயர் நிலைக்கும் செய்யுளில் இசை நிறைத்தற்கும் ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வருவது அளபெடை ஆகும்.

ஆ. விரைவு, வெகுளி, அச்சம் முதலிய பெயர் நிலைக்கும் செய்யுளில் இசை நிறைத்தற்கும் ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் ஆகும்.

இ. விரைவு, வெகுளி, அச்சம் முதலிய பெயர் நிலைக்கும் செய்யுளில் இசை நிறைத்தற்கும் ஒரு சொல் இரண்டு மூன்று முறை அளபெடுத்து வருவது அடுக்குத் தொடர் ஆகும்.

ஈ. விரைவு, வெகுளி, அச்சம் முதலிய பெயர் நிலைக்கும் செய்யுளில் இசை நிறைத்தற்கும் ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வருவது அளபெடை ஆகும்.

(iii) அ. கோப்பெருந்தேவி வந்தான்

ஆ. கோப்பெருந்தேவி வந்தாள்

இ. கோப்பெருந்தேவி வந்தனர்

ஈ. கோப்பெருந்தேவி வந்தது

(iv) அ. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவது 'அடுக்குத் தொடர்' ஆகும்.

ஆ. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவது 'ஒரு பொருட் பன்மொழி' ஆகும்.

இ. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவது 'இரட்டைக் கிளவி' ஆகும்.

ஈ. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவது 'வழுவமைதி' ஆகும்.

(v) அ. யானை பிளிறியது.
ஆ. யானை அலறியது.
இ. யானை குழறியது.
ஈ. யானை உறுமியது.

## பகுதி - ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

சிதம்பரனார் தாய்த்திருநாட்டின் திருப்பணியில் முற்றும் துறந்த முனிவர் போலச் சுக போகங்களைத் துறந்து தொண்டாற்றினார். நாட்டு விடுதலைக்காக அவர் பல ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். அண்டினோர்க்கு அள்ளி அள்ளி வழங்கும் அன்னாருடைய செம்மை சான்ற திருக்கரங்கள் சிறையில் செக்கிழுத்தன. சொல்லொணா வலியில் துடித்தன. அவர் இந் நாட்டின் விடுதலைக்காகப் பட்ட எல்லையற்ற இன்னல்கள் அனைத்தும் இக் கால மக்கள் மனதில் நாட்டுப் பற்றையும் தியாக உணர்ச்சியையும் சிறந்த ஆவேசத்தையும் ஊற்றெடுத்துப் பதியச் செய்யும் என்பதில் ஐயமில்லை. சுருங்கக் கூறின் நமது சிதம்பரனாரை அக் காலத்தில் தமிழ் மக்கள் 'தென்னாட்டுத் திலகர்' என்று கூறியது சாலவும் பொருந்தும். மலை அசைந்தாலும் அசையாத மனத்தவராகிய திலக முனிவரது அரசியல் கொள்கையைத்தான் சிதம்பரனார் பின்பற்றி வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

**வினாக்கள்.**

(i). சிதம்பரனார் சுகபோகங்களைத் துறந்து தொண்டாற்றியது
அ. வீட்டிற்காக
ஆ. தம் உறவினருக்காக
இ. தாய்த் திரு நாட்டிற்காக
ஈ. பொருளீட்டுவதற்காக

(ii). சிதம்பரனார் சிறையில் அடைபட்டுக் கிடந்தது
அ. நாட்டு விடுதலைக்காக
ஆ. கல்லுடைப்பதற்காக

இ. செக்கிழுப்பதற்காக
ஈ. நூல் எழுதுவதற்காக

(iii). மக்கள் மனதில் நாட்டுப் பற்றை வளர்த்தது
அ. சிதம்பரனாரின் நூல்
ஆ. சிதம்பரனார் உற்ற இன்னல்கள்
இ. சிதம்பரனாரின் எளிமை
ஈ. சிதம்பரனாரின் தூய்மை

(iv). சிதம்பரனாரைப் போற்றி மக்கள் அளித்த பட்டப் பெயர்
அ. தென்னாட்டுக் காந்தி
ஆ. வடநாட்டுத் திலகர்
இ. இந்நாட்டுத் திலகர்
ஈ. தென்னாட்டுத் திலகர்

(v). சாலப் பொருந்தும் என்ற சொல்லின் பொருள்
அ. சிறிது பொருந்தும்
ஆ. சற்றே பொருந்தும்
இ. மிகவும் பொருந்தும்
ஈ. யாவும் பொருந்தும்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

மு.வ. அவர்கள் தன் தங்கைக்கு எழுதிய கடிதத்தில், ``நிறைந்த உள்ளத்தோடுதான் பின்வரும் அறிவுரைகள் எழுதுகிறேன். அறிவுரைகள் எழுதுவதைக் கண்டதும் உன்னிடம் ஏதோ குறை கண்டு எழுதினேன் என்றோ கேளவிப் பட்டு எழுதுகிறேன் என்றோ எண்ணிவிட வேண்டாம். குறையிருந்தால் தான் அறிவுரை கூற வேண்டும் என்பதில்லை. குறை நேராமலிருக்க வேண்டும் என்பதற்காகவும் அறிவுரை கூற வேண்டும் அல்லவா? அந்த வகையில் தான் என் கடமையைச் செய்ய முன் வருகிறேன். எத்தனையோ படிக்கின்றாய்; கேட்கின்றாய்; இவற்றையும் படி; கேட்டுக் கொள். ஓய்வு இருக்கும் போது எண்ணிப் பார். ஒரு செம்மறி ஆடு முன்னே சென்று இடர்ப் பட்டால் பின்னே வரும் ஆடுகள் அதனைக் கண்டு ஒன்றும் திருந்துவதில்லை; பயனடைவது இல்லை. முன்னே சென்றது விழுந்த பள்ளத்திலேயே எல்லாம்

சென்று விழுமாம். மனிதராகிய நாம் ஏன் அப்படி விழ வேண்டும். ஆகையால் மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைவுகளையும் எண்ணிப் பார்ப்பது, நம்மை நாம் காத்துக் கொள்வதற்கு மிகவும் பயன்படும். உண்மையாக ஆராய்ந்தால் இப்படி நேரே வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி. எனவே உயர்ந்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படி" என்று குறிப்பிடுகிறார்.

**வினாக்கள்**

(i). அறிவுரைகள் கூறுவது

அ. பிரிவதற்கு

ஆ. முன்னேறுவதற்கு

இ. குறை நேராமலிருப்பதற்கு

ஈ. வெற்றி பெறுவதற்கு

(ii). ஓய்வு நேரத்தில் செய்ய வேண்டிய பணிகள்

அ. படித்தல், கேட்டல், சிந்தித்தல்

ஆ. சேர்தல், பிரிதல், மறத்தல்

இ. தருதல், கொடுத்தல், ஈதல்

ஈ. ஓடுதல், நடத்தல், செல்லல்

(iii). ஒரு செம்மறி ஆடு முன்னே சென்று விழுந்தால் பிற செம்மறி ஆடுகள்

அ. திருந்துவதில்லை

ஆ. திருந்தும்

இ. விழாது

ஈ. சிறக்கும்

(iv). மனிதர்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்கு செய்ய வேண்டுவன

அ. மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைவுகளை எண்ணிப் பார்த்தல்

ஆ. மற்றவர்களைப் புகழ்ந்துரைத்தல்

இ. தன் மனதில் தோன்றியதைச் செய்தல்

ஈ. பிறரைக் கண்டு பொறாமைப் படுதல்

(v). குறை நேராமலிருக்க செய்ய வேண்டுவது

அ. அறிவுரை கேட்பது

ஆ. தன்னிச்சையாகச் செயற்படுவது

இ. குறை கூறுவது

ஈ. பிறரைப் போற்றுவது

3. கீழ்வரும் பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க. **(4)**

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே

வினாக்கள்

(i). ------------ ஏந்திக் குளிர்மழை காத்தான்

அ. குன்றம்
ஆ. மாமலை
இ. ஆறு
ஈ. ஓடம்

(ii). ஞாலம் என்பதன் பொருள்

அ. அறிவு
ஆ. செல்வம்
இ. உலகம்
ஈ. உடைமை

(iii). இப்பாடலடிகள் குறிப்பிடும் இறைவன்

அ. திருமால்
ஆ. சிவன்
இ. முருகன்
ஈ. காளி

(iv). ஞாலம் அளந்த பிரான்

அ. சிவன்
ஆ. பிரமன்
இ. விஷ்ணு
ஈ. இந்திரன்

4. விடையளிக்க. (ஏதேனும் ஒன்று மட்டும்) (5)

(அ). அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. எவ்வாறு விளக்குகிறார்?

(ஆ). அமிர்த கவிராயரின் ஒரு துறைக் கோவை அரங்கேற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக

(இ). எதனை உயர்ந்த கல்வி என மு.வ. எடுத்துரைக்கிறார்.

5. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (5)

(அ).ஊக்கமே சிறந்ததென்பதையும் அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

(ஆ). அருக தேவனைச் சமண முனிவர் எங்ஙனம் புகழ்ந்துள்ளார்?

6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (2)

(அ).எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டும் என மு.வ. கூறுகிறார்?

(ஆ). செய்ந்நன்றி மறவாமைக்கு வ.உ.சி. எடுத்துக்காட்டும் குறள் யாது?

7. விரிவாக விடையளிக்க (6)

அ. காய்ச்சமரம் என்ற கதையை கருப்பொருள் சிதையாமல் சுருக்கி எழுதுக.

ஆ. தாய்ப்பசு - கதையை சுருக்கி எழுதுக,

8. சுருக்கமாக விடையளிக்க (3)

அ. கார்த்திகேயனின் பண்பு நலன்களை எழுதுக.

ஆ. நிம்மாண்டு நாயக்கரின் பண்பு நலன்களை எழுதுக.